**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 55 of 2022**

Prosecution witness LW5 (PW6) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade-I B.C., on date 20.08.2024 in accordance wigh provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கலந்தர் | Father Name | : | தில்பாஷா |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**Accused present.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் பாரண்டபப்பள்ளி , திருப்பத்தூர் மாவட்டத்தில் வசிக்கிறேன். என் அப்பாவிற்கு 2 மனைவிகள். என்அப்பாவின் 2வது மனைவி மகன் பெயர் ரஷீத். ரஷித் மிட்டப்பள்ளியில் என் அப்பாவுடன் இருந்தார் . ரஷித் டிரைவராக பணிபுரிந்தார். ரஷித் அவரின் நண்பர்களான பிரதீப் , மனோகர், மற்றொரு பெயர் ஞபாகமில்லை . ஒரப்பம் ஒயின்சாப்பில் சரக்கு வாங்கி குடித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் அனைவரும் போதையில் இருந்தார்கள். அவர்களுக்கு என்னவாயிற்கு தெரியவில்லை . அதற்குள் என் தம்பி இறந்துவிட்டதாக போன் செய்து தகவல் சொன்னார்கள்.

அதன்பிறகு நான் பாடியை ஒரப்பத்திற்கு வந்து பார்த்தேன் . என் தம்பிக்கு பின் தலையில் அடிப்பட்டிருந்தது . ஆம்புலன்ஸ் வந்து அந்த பாடியை ஏற்றி அனுப்பிவைத்துவிட்டார்கள் . மறுநாள் அரசு மருத்துவமனைக்கு சென்று போஸ்ட்மார்டம் முடித்தபிறகு பாடியை பெற்று அடக்கம் செய்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் 7-8 வருடங்களாக திருப்பத்தூர் மாவட்டம், பாரண்டப்பள்ளி கிராமத்தில் வசிக்கிறேன். தோராயமாக என் தம்பி பாடியை இரவு 8-10 மணிக்கு பார்த்திருப்பேன். நான் போகும்போது போலிசார் அங்கு இருந்தார்கள் என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரித்தார்கள் நான் நேரில் பார்க்கவில்லை என்று சொன்னேன். என் தம்பி ரஷித் -ன் நண்பர்களை நான் எப்போதும் நேரடியாக பார்த்ததில்லை என்றால் சரிதான். நான் சொலவதுபோல் இரவு 8-10 மணிக்குள் பாடியை பார்த்ததாக சொல்வது விவரங்கள் பொய்யானவை என்றும், போலிசார் சொல்லிக்கொடுத்து அவ்வாறு பார்த்தாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

V DAMODARAN

Additional District Judge
Digitally signed by V DAMODARAN

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 55 of 2022**

Prosecution witness LW7 (PW7) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade-I B.C., on date 20.08.2024 in accordance wigh provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஷாபு | Father Name | : | அமீர் |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**Acused present.**

**முதல் விசாரணை:**

நான் பர்கூர் ஹவுசிங் போர்டில் குடியிருந்து வருகிறேன் . கசாப் கடை வைத்திருக்கிறேன். ஆடு வியாபாரம் செய்கிறேன் . என் சகோதரர் பெயர் ஷேக்சர்தார். மிட்டப்பள்ளியில் என் சித்தி மகன் ரஷித் வசித்து வந்தார் . 27.10.2021 ல் வியாழக்கிழமை சாயங்காலம் 4.00 மணிக்கு போன் வந்தது. 4 பேர் சேர்ந்து கிணற்றில் தள்ளி என் தம்பி மகன் ரஷித் -ஐ கொலை செய்துவிட்டதாக தகவல் சொன்னார்கள் . அதன்பிறகு நான் செட்டிப்பள்ளிக்கு வந்தேன் . செட்டிப்பள்ளியில்தான் கிணற்றில் தள்ளி சாகடித்துவிட்டார்கள்.

அந்த கிணறு ஒயின்சாப் பக்கம் இருக்கிறது . நான் வருவதற்குள் தீயணைப்பு வாகனம் வந்து பாடியை வெளியே போட்டிருந்தார்கள் . நான் வத்ந பிறகு தனியார் ஆம்புலன்ஸ் வைத்து ஜி.எச்-ற்கு எடுத்து சென்றார்கள். மறுநாள் போஸ்ட்மார்டம் செய்து கொடுத்தார்கள். அதன்பிறகு அந்த உடலை புதைத்துவிட்டோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் அங்கு போகும்போது 5 மணியிருக்கும் என்றால் சரிதான் . என்னை இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

Additional District Judge

V DAMODARAN

Digitally signed by V DAMODARAN